பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5 00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 14 வியாழக்கிழமை (30 09 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 306

## முப்படைத் தாக்குதல்களுடன் கரையோரமாக

# இயக்கச்சியில் முன்னேற முயலும் படையைத் தடுத்து உக்கிரப் போர்!

## 60க்கும் அதிக துருப்புகள் புலிகளின் தாக்குதலில் பலி!

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 30

நேற்று இரண்டாவது நாளாக முப்படைத் தாக்குதல்களுடன் ஆனையிறவு இராணுவத் தளத்திலிருந்தும், இயக்கச்சிப் பகுதியிலிருந்தும் கரையோரமாக முன்னேற முயலும் ஸ்ரீலங்கா இராணுவத்தை தடுத்து நிறுத்தி விடுதலைப் புலிகள் அவர்களுடன் உக்கிரச் சண்டை புரிந்து வருகிறார்கள். புலிகளின் தாக்குதல்களில் அறுபதுக்கும் அதிக படையினர் உயிரிழந்ததாக அறிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை டாங்கிகள், கவசக வாகனங்கள், பீரங்கிகள் சகிதம் பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் முன்னேற முயன்றபோது விடுதலைப் புலிகளின் படையணிகள் இராணுவத்தினரை வழிமறித்து உக்கிரப் போர் புரிந்தனர்.

## புலிகள் வீராவேசம்

விமானக் குண்டு வீச்சுகள், ஹெலித் தாக்குதல்கள், அகோர பீரங்கி, ஷெல் குண்டுமாரி ஆகியவற்றுக்கு மத்தியில் விடுதலைப் புலிகள் போராளிகள் வீராவேசத்துடன் போர் புரிந்தனர் என்றும் —

நேற்று மாலைக்குப் பின்னரும் அப்பகுதியில் தொடர்ந்தும் மோதல்கள் இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## 2 கவச வாகனங்களும் 2டாங்கிகளும் அழிப்பு

முன்னேற முயன்ற படையினரின் இரண்டு டாங்கிகளும், இரண்டு கவச வாகனங்களும் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் முற்றாக அழிக்கப்பட்டதாக 'புலிகளின் குரல்' அறிவித்தது.

## கனரக ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன

இயக்கச்சியில் முன்னேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது கனரக ஆயுதங்கள் உட்பட பெருமளவு நவீன ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அவற்றின் விபரம் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவரவில்லை.

## 43 போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 30

இயக்கச்சிப் பகுதியில் முன்னேற முயன்ற படையினருடன் நடந்த சண்டையில் விடுதலைப் புலிகள் போராளிகள் 43 பேர் வீரமரணமடைந்ததாக தெரியவந்தது.

அவர்களில் 19 பேரின் விவரம் வருமாறு:

- கார்வண்ணன் அல்லது ரகுநாத் (குணரத்தினம் குணராஜ் — கல்வியங்காடு)
- இளமுருகன் (ஜயாத்துரை அன்பழகன் — மாவிட்டபுரம்).
- உதயகுமார் அல்லது இச்சான் (சிமோன்பிள்ளை கிறிஸ்ரி — அடம்பன்)
- ஐயாத்துரை (வல்லிபசிங்கம் ஜெயக்குமார்—அடம்பன்)
- உமா (அந்தோனிப்பிள்ளை தேவமோகன்- இலுப்பைக்குளம்)
- குமணன் (செல்வரத்தினம் குணரத்தினம் — முருகன்)
- தம்பித்துரை (பாசல் அன்ரன்—பரப்புக்கடந்தான்)

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒப்பரேஷன் யாழ்தேவி!

கொழும்பு, செப். 29

ஆனையிறவுக்கு வடக்கே முப்படையினரும் ஆரம்பித்திருக்கும் இராணுவ நடவடிக்கைக்கு "ஒப்பரேஷன் யாழ்தேவி" எனப் பெயரிடப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

விமான, பீரங்கி மற்றும் கவசப் படைகளின் உதவியோடு காலாட் படையினர் பலத்த தாக்குதலை மேற்கொண்டிருப்பதாகவும் —

கடந்த ஒரு வருடத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட மிகப்பெரிய இராணுவ நடவடிக்கை இது என்றும் — பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-எ-6)

## ஒட்டகப்புலம் பகுதியிலும் படை முன்னேற முயற்சி

பலாலி முகாம் படையினர் ஒட்டகப்புலம், செல்வநாயகபுரம் பகுதிகளில் இருந்து நேற்றுக்காலை 8 மணிக்கு நவக்கிரிப் பகுதியை நோக்கி முன்னேற முயன்றபோது அவர்களை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி தடுத்து நிறுத்தியதாகத் தெரியவந்தது.

துப்பாக்கிப் பிரயோகங்கள், ஷெல் தாக்குதல்கள் நடத்தியவாறு புறப்பட்ட இராணுவத்தினரே விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல்களைச் சமாளிக்க முடியாது பின்வாங்கினர்.

முகாம் திரும்பிய படையினர் நவக்கிரி மற்றும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

## கிளிநொச்சியில் ஹெலி சூடு இருவர் படுகாயமடைந்தனர்

யாழ்ப்பாணம், செப். 30

நேற்றுக் காலை 8 30 மணியளவில் கிளிநொச்சி குஞ்சுப்பரந்தனில் ஹெலி ஒன்று பொதுமக்கள் மீது நடத்திய பலத்த தாக்குதலில் இருவர் காயமுற்றனர்.

காயமுற்றவர்களில் ஒருவர் சிவயோகநாதன் ...

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இளம் தாய், இரு பிள்ளைகள் உட்பட

# நவக்கிரியில் ஏழு பேர் பலி பலாலி முகாம் ஷெல்லுக்கு!

## 11 பேர் காயம்; பல வீடுகள் சேதம்

யாழ்ப்பாணம், செப். 30

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நவக்கிரி, புத்தூர் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலின் போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட ஏழு பேர் அவ்விடத்திலேயே உயிரிழந்தனர்; 11பேர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் பலத்த சேதமடைந்தன.

தோப்புகைத்தொழில் பேட்டை நவக்கிரி, நிலாவரையடி, ஆவரங்கால் தோட்டப் பகுதி, புத்தூர் தனியார் மருத்துவமனைப் பின் பக்கம், புத்தூர் கிழக்கு ஆகிய பகுதிகளில் சுமார் இருபத்தியைந்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் விழுந்து வெடித்தன.

நவக்கிரி எல்லாளன் சனசமூக நிலையத்திற்கு அருகில் விழுந்த ஷெல்லினால் இளம் தாயும் அவரது இரண்டு பிள்ளைகளும் உட்பட ஏழு பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் மற்றும் சிலர் காயமுற்றனர்.

பாடசாலைக்குச் சென்ற பிள்ளைகளை, ஷெல் தாக்குதல் ஆரம்பமானதை அடுத்து கூட்டி வருவதற்காகச் சென்ற இளம் தாயே பிள்ளைகளைக் கூட்டி வரும் போது வழியில் ஷெல்லுக்கு இலக்காகி பிள்ளைகளுடன் உயிரிழந்தார்.

நவக்கிரியைச் சேர்ந்த கோணேஸ்வரன் லோகேஸ்

(5ஆம் பக்கம் பார்க்க)

# தென்மராட்சிப் பகுதியில் நேற்று பலத்த ஷெல் வீச்சு

## பளையில் மூவர் பலி

தென்மராட்சி, செப். 30

நேற்று தென்மராட்சிப் பகுதியில் பரவலாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்கள் காரணமாக மூவர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்தனர். பயன்தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்தன. குடிமனைகளுக்கும் பலத்த சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் கால் நடைகளும் இறந்துள்ளன.

பளை அரசர் கேணியிலேயே மூவர் பலியாகினர்.

புக்காரா விமானம் வட்டமிட்டபோது மரம் ஒன்றின் கீழ் மறைந்திருந்த போது இயக்கச்சிமுகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் இவர்கள் நின்ற இடத்துக்கு அருகில் விழுந்து வெடித்ததால் இவர்கள் உயிரிழந்தனர்.

காலை 10-00 மணிக்குநடந்த இந்தச் சம்பவத்தின் போது, இயக்கச்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து பளை, அரசர் கேணியில் தங்கியிருந்த தவராசா பொன்னம்மா (வயது 46), நடராசா இராசமணி (வயது 82) தவபாலசிங்கம் பாகரன் (வயது 2) ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு நீடிப்பு

கொழும்பு, செப். 30

யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களில் நேற்று முன்தினம் காலை 6 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்பட்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (அ-எ-6)

## பளை - கல்வயலில் காயமடைந்தோர்

யாழ்ப்பாணம், செப். 30

நேற்றுக் காலை பளை, அரசர்கேணியிலும் நேற்று மாலை சாவகச்சேரி கல்வயல் பகுதியிலும் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் காயம் அடைந்தோர் விபரம் வருமாறு:-

பளை அரசர்கேணி

எஸ் தவராசா (உயிரிழந்த மூவரில் ஒருவரான பொன்னம்மாவின் கணவர்), பிள்ளைகளான தர்மசோதி (வயது 17) ஐங்கரநாதன் (வயது 10), வைரமுத்து ஆனிடன் (வயது 60), வாரித்தம்பி நாகரத்தினம் (வயது 46), அவரது மகள் வசந்தஜீரனி (வயது 37), பராராஜசிங்கம் சிவகுமரன் (வயது 10), இவரது தமக்கை சிந்துஜா (வயது 8), தம்பி சிவதீபன் (வயது 6), மற்றும்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கொடிகாமத்தில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், செப். 30

மண்டைதீவில் இருந்து நேற்று மாலை யாழ். கோட்டை பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் காயம் அடைந்தார்.

கொக்குவில் மேற்கு கற்பிட்டியைச் சேர்ந்த இருசெல்வம் சந்திரகுமார் (வயது 19) என்பவரே காயமடைந்தவர் ஆவார். (இ-15)

## மக்கள் பெருமளவு நேற்று இடம்பெயர்வு

யாழ்ப்பாணம், செப் 30

நேற்று இடம்பெற்ற அகோர ஷெல் தாக்குதல்கள் காரணமாகவும் மற்றும் விமானத் தாக்குதல்கள் காரணமாகவும் தென்மராட்சிப்பகுதியிலும் வலிகாமம் கிழக்கிலும் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர்.

தென்மராட்சியில்பேராலை, மீசாலை, மட்டுவில், வரணி, கெற்பேலி, கச்சாய், மிருசுவில், எழுதுமட்டுவாழ், இயக்கச்சி, சோரன்பற்று, மாசார், சங்கத்தார்கேணி, கரம்பகம், நாவற்காடு, கரம்பைக்குறிச்சி, கைதடி, வட்டுக்கோட்டை, சரசாலை, மறவன்புலோ, கல்வயல், நுணாவில், சாவகச்சேரி, நாவற்குழி, தனங்கிளப்பு, மந்துவில் மற்றும் கேணி, கறுக்காய், புலோப்பளை, பளை, மாசார், இத்தாவில், கிளாலி, அல்லிப்பளை, புலோப்பளை, செல்வபுரம், இத்தாவில், இந்திராபுரம், வேம்பொடுகேணி, பெரியபளை, தம்பகாமம் ஆகிய பகுதிகளில் இருந்தே மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்தனர்.

மற்றும் வலிகாமம் கிழக்கில் அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், பத்தமேனி, தம்பாலை, ஈவினை, நவக்கிரி, செல்வநாயகபுரம், அச்செழு, தொழிற்பேட்டை ஆகிய இடங்களில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உளவளத் துணை நிலையம்
## அதிர்ஷ்ட லாபச் சீட்டு

சென்ற செப்டம்பர் மாதம் ஐந்தாம் திகதி (05 - 09 - 1993) நடைபெறவிருந்த எமது அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு எதிர்வரும் ஐப்பசி மாதம் 3 ஆம் திகதி (03 - 10 - 1993) காலை 10 மணிக்கு நடைபெறும் என அறியத் தருகின்றோம்.

பணிப்பாளர்,
''சாந்தியகம்''
15, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்

(27480)

## யாழ். பொறியியல் இணையம்
## விரிவுரை

**''நியூசிலாந்தில் வாழ்வியலும் பொறியியலும்''**

கலாநிதி எல். நகுலேஸ்வரன்
கன்ரபரி பல்கலைக் கழகம்,
நியூசிலாந்து.

இடம்:- நாவலர் கலாசார மண்டபம்.
காலம்:- 01—10—1993
வெள்ளி பிற்பகல் 3-00 மணி
ஆர்வலர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்
நிர்வாகம்

(27482)

## மணிவிழாக் காணும் உடற்பயிற்சி ஆசானுக்கு
## மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



### திரு. அ. தம்பித்துரை

எளிமை, தூய்மை, கண்ணியம், ஹாஸ்யம் கலந்த கண்டிப்பு, வைராக்கியம் நிறைந்த இறைபக்தி முதலான நற்பண்புகளின் மொத்த வடிவே ஆசிரிய திலகம் திரு. அ. தம்பித்துரை அவர்கள்.

இவரது அருஞ்சேவை, கற்பித்த பாடசாலைகளுக்குள் மட்டும் அடங்கியதன்று; அதற்கப்பாலும், ஓய்வுபெற்ற பின்பும் ஓயாது அவர் சேவை தொடர்கிறது.

இவ் வகையில் எமது வித்தியாசாலை விளையாட்டுப் போட்டி சிறப்புற, மாணவிகளின் உடற்பயிற்சி அணி இல்லங்களின் அணி நடை அணிகள் என்பவற்றை மெய்வருத்தம் பாராது, மிகவும் குறுகிய காலத்தன் பலரும் பாராட்டும் வண்ணம் உருவாக்கித்தந்தமை நெஞ்சகலா நிகழ்ச்சி!

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலைக் கல்விச் சமுதாயம் அன்னாரின் மணிவிழாப் பொலிவுறவும், தொடர்ந்தும் அவர்தம் சேவை இத்துறையில் அனைவருக்கும் கிட்டவும் இறைவனை வழுத்தி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்,
மாணவர், அபிவிருத்திச் சபையினர்.
ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை,
கொக்குவில்,
1993 - 9 - 30.

(27478)

## கண்ணீர் அஞ்சலி

### செல்வி கௌசிகா கணேசன்

ஓ! கௌசிகாவே,
அரன் அவன் செய்த வினையால்
அகைக்கத்தான் மறந்தாயோ உன் விழியை-நேற்று
ஆசையாகம் பள்ளி வந்த உனக்கு-இன்று
அழுகையுடன் கண்ணீர்தான் காணிக்கையோ...

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யாழ். திருக்குடும்ப கன்னியாமடம்.

(27479)

## A/L 94
## PAPER CLASSES

ஆரம்பம்:
02 — 10 — 1993
சனி முற்பகல் 8-00

CHE
Mr M.A.N. அன்ரனி
PHY
Mr. ஜெயபாலன்
ZOO
Mr. குணேந்திரன்
BOT
பிரபல ஆசிரியர்

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி
(27484)

யாழ்ப்பாணம்
பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடம்

கீழே குறிக்கப்பட்ட பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடம் இருந்து 1993 - 10 - 20 ஆம் திகதி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

பதவி:
ஆய்வுகூடக் கவனிப்பாளர் (ஒரு வருட ஒப்பந்த அடிப்படை)

சம்பளம்:
ரூபா 3,815/- (நிலையானது) மாதமொன்றுக்கு

தகைமைகள்:
1. எட்டாம் வகுப்புச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. ஆய்வுகூடச் சாதனங்கள், ஆய்வு கருவிகள் பொதுவான பயன்பாட்டில் உள்ள இரசாயனப் பொருள்கள் பற்றிய அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.

தெரிவு:
பொது உளச்சார்பு பரீட்சை மூலமும், நேர்முகத் தெரிவு மூலமும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவங்களை ரூபா 20/ ஐ திறைசேரியில் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். தபால் மூலம் விண்ணப்பப் படிவங்களைப் பெறவிரும்புவோர் அதற்கான வேண்டுகோளுடன் ரூபா 20/-க்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 X 10 ச.மீ. அளவுடையதும் சுயமுகவரி இடப்பட்டதும் ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களைத் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக் கிளையில் இருந்து பெறப்படாத படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், கேட்கப்பட்ட விபரங்கள் குறிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

— பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
1993-09-...
(இ-5978)

கச்சதீவு விவகாரம்:

## மீன்பிடிக்கும் உரிமை குறித்து இலங்கை - இந்தியா பேச்சு

சென்னை, செப் 30
கச்சதீவுக் கடலில் இந்திய மீனவர்களுக்கு உள்ள மீன்பிடிக்கும் உரிமை தொடர்பாக இலங்கை, இந்திய அரசுகளுக்கு இடையே பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற் பிராந்தியத்தில் வைத்து இந்திய மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள்—

வடபகுதிக் கடல் தடை செய்த பகுதியாக அறிவிக்கப்பட்டது — ஆகியன குறித்து தனது கவலையை இந்திய அரசு இலங்கைக்கு உணர்த்தியுள்ளது என்றும் —

இது குறித்து விரைவில் இரு தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒப்பந்தம் ஒன்றை எட்ட முடியும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ-க)

## கலை, வர்த்தக கல்லூரி
## C. C. A.

யாழ்ப்பாணம்.

## G.C.E A/L 94
### வினா விடை வகுப்பு

வர்த்தகம் —
திரு. இரட்ணம்

ஆரம்பம்:
02 - 10 - 1993
காலை 7-00 மணி

குறிப்பு:
1993 வினாப்பத்திரம் புள்ளி வழங்கல் திட்டத்திற்கு இணங்க ஆரம்பம்.

சனி, ஞாயிறு
7-00 — 9 00 மணி

- நிர்வாகி -

(இ-6159)

## சிறுமி பலி

நேற்று முன்தினம் இரவு—விமானத் தாக்குதல் இருந்த வேளை —வெளிச்சமில்லாமல் வந்த வாகனம் ஒழுங்கை ஒன்றில் திரும்பிய போது எதிரே நடந்து வந்த சிறுமியை மோதியதால் சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

இயக்கச்சி சங்கத்தார் வயலில் இருந்து இடம்பெயர்ந்து பளை செல்வபுரத்தில் தங்கியிருந்த சுகந்தரா (வயது 13) என்னும் மாணவியே மரணமானவராவர். (உ-117)

உ
சாவகச்சேரி

## அருள் மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
## ★ மஹா சண்டிஹோம அழைப்பு ★

அன்புடையீர்!

வியாழனது மாற்றம் 12-10-1993 அன்று ஏற்படுவதை முன்னிட்டு நாட்டின் நன்மை கருதியும் கீழே கொடுக்கப்பட்டுள்ள நக்ஷத்திரத்திற்குரிய தோஷம் உடையவர்கள் பங்குபற்றவும் மேலே குறிப்பிட்டுள்ள சண்டிஹோமம் சென்ற வருடத்திலும் பார்க்க வெகு சிறப்பாக நடைபெறும்.

**08 — 10 — 1993 முதல் 10 — 10 — 1993 வரை**
(வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை)

கணபதிஹோமம், நவக்கிரகஹோமம்,
துர்க்காஹோமம், சண்டிஹோமம்

என்பன தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறும்.
தோஷமுடையவராகக் கருதப்படுபவர்களது ராசிகள்
இடபராசி, சிம்மராசி, துலாராசி,
விருட்சிகராசி, மகரராசி, மீனராசி.

இந்த உபயத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் கூடிய விரைவில் ஆலயத்தில் தொடர்பு கொள்ளவும். அடியார்கள் அனைவரும் மூன்று நாட்களும் தொடர்ந்து காலை, மாலை பங்குபற்றி மூன்றாம்நாள் காலை ஆயிரத்தெட்டு பால்செம்பு எடுத்து அம்பிகைக்கு பாலாபிஷேகம் செய்ய உதவுக. இவ்யாகத்தில் பூஜையில் வைக்கப்பட்ட யந்திரம், நூல் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வேள்வி சிறப்பாக நடைபெற அடியார்கள் தேவையான நிதியுதவி, தானியவகை, சமித்துவகை, கற்பூரம், தேங்காயெண்ணெய், பால், தயிர், பழவகை, பன்னீர், இளநீர், கரும்பு, சொர்ணபூ, பூமாலை என்பன கொடுத்துதவி; சரீரத் தொண்டுகள் புரிந்து அன்னை துர்க்காதேவியின் அருட்கடாட்சம் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

அனைவரும் வருக! அன்னையருள் பெறுக!!

இங்ஙனம்,
பிரம்மஸ்ரீ ப. மஹாகணபதி சர்மா,
(ஆலய தர்மகர்த்தா).

(27445

## வாழ்த்துகின்றோம்

இன்று (30 - 9 - 93) மணிவிழாக் காணும் கன்னாகம் தந்த உடற்பயிற்சி ஆசான் திரு. அ. தம்பித்துரை ஆசிரியர் அவர்கள் இப்போது இருப்பது போல் என்றென்றும் ஈரெட்டாகவே இருக்க வேண்டுமென்று இறைவனை வேண்டி, மனதார வாழ்த்துகின்றோம்.

வ. நடராஜா

ஜீவா
பல்பொருள் வாணிபம்,
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்.

(6678)

## எமது நேற்றைய வெளியீடு

மணிவண்ணனின்
★ மூன்றாவது கண்
சரத்குமார், மோனிஷா, மன்சூர்அலிகான்

## சுப்பலோ வீடியோ ஓடியோ சென்ரர்

198/5 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(இ/5981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய தீர்த்தோற்சவ சிறப்பிதழ்

30 – 09 – 1993

## பக்தர்கள் உள்ளத்தில் பள்ளிகொண்டு அருளும் நாராயணனின் உறைவிடம் வல்லிபுரக் கோயில்

தர்மத்தைக் காக்கவும் அதர்மத்தை அழிக்கவும் பத்து அவதாரம் எடுத்து இந்தப் பாருலகையே தன் வாய்க்குள் அடக்கியவன் பாஞ்சஜன்யன். சுதர்சனம் ஏந்திப் பாற்கடலிலிருந்து அண்ட சராசரங்களையும் காக்கின்றவரும், கொஞ்சிக் கொஞ்சி மோகம் தீரா ஏக்கத்துடன் கோபியர்களைச் சுற்றி வர வைத்தவன் கிருஷ்ணன்.

"அஞ்சாதே அர்ஜுனா அனைத்துக்கும் நானே கர்ப்ப நாயகன் கடமையைச் செய்" என்று ஐந்தாம் வேதம் தந்த கீதாசாரியனான மாயக் கண்ணன் அருள் கொழிக்க நின்று கொண்டிருக்கும் திருத்தலம் தான் இலங்கையிலுள்ள விஷ்ணு ஆலயங்களுள் வரலாற்றுத் தொன்மையும், தலச்சிறப்பும் வாய்ந்ததும், பலப்பல நூற்றாண்டு பழமை



மிக்கதுமான வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமாகும்.

இந்த ஆலயம் அழகிய கடற்கரையை அண்டிய அமைதியான சூழலில் அமைந்துள்ளது. ஈழத்தின் வடபகு

— காவேரி —

திப் பருத்தித்துறை நகரிலிருந்து கிழக்குப் புறமாக மூன்றாவது மைல் தூரத்தில் இந்த அழகிய ஆலயம் அமைந்துள்ளது.

திருமாலை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் வைணவம். தொன்று தொட்டு பல உயர்ந்த தத்துவங்களை தன்னுள் அடக்கி மிளிரும் இச்சமயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர்கள் ஆழ்வார்கள்.

இவர்களின் அருட்பாசுரங்களிலே திருமாலின் பன்னிரு திருப்பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. கேசவன், நாராயணன், மாதவன், கோவிந்தன், விட்டுணு, மதுசூதனன், திருவிக்கிரமன், வாமனன், சிதரன், இருடிகேசன், பத்மநாபன், தாமோதரன் என்பனவே அவை.

இவற்றுள் நாராயணன் என்றபெயரைக் கொண்ட எட்டெழுத்து மந்திரம் பெரிய திருமந்திரம் என்ற சிறப்பையுடையது. நாராயணன் என்பது நாரம் + அயனன் என்ற இரண்டு சொற்களால் ஆனது. இதற்கு இரண்டு வகையாகப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

மலர் அமைப்பு:
உதயன் வடமராட்சி
செய்தியாளர்
எஸ். ரி. நாதன்


மாதம் மும்மாரி மழை பெய்து
விட்டால் ஈழமெங்கும் வளம் பெருகுமே!
மாயக் கண்ணன் அருள் கிடைத்து விட்டால்
மக்களுக்கேதும் குறையுமுண்டோ?
பஞ்சவண்ண பவனி காண்பதற்கு
பக்தியுடன் சராது மாதங்கள் தவமிருந்தோம்
வல்லிபுர ஆழ்வார் மனம் இரங்கி விட்டார்
அவருக்கு இன்று தீர்த்தத் திருவிழா

**வடமராட்சி மேடை சீன்ஸ், ஒலி**
அமைப்பாளர்
முத்துராஜா புரடக்ஷன்
தும்பளை, பருத்தித்துறை.

"எவன் ஒருவன் எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பு இல்லாமல் இருக்கிறானோ, அவனே இறைவனை அடைகிறான்."

தேநீர், பால் தேநீர், சுவையான சிற்றுண்டி வகைகளைப் பெற்றிட

**ராதா தேநீர் அகம்**
(ஆஸ்பத்திரி முன்பாக)
ஆஸ்பத்திரி வீதி, மந்திகை.

"எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்வதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள் இறைவனை அடைகிறார்கள்."

பேக்கரி உற்பத்திப் பொருள்கள், பிஸ்கட் வகைகள்

**ராஜா தொழிலகம்**
ஐடியல் உற்பத்தி நிலையம்
சுதர்ஸனம் விற்பனை நிலையம்,
நெல்லியடி, கரவெட்டி.

"நம் உள்ளம் பலவீனப்பட்டு இருக்கும் வரையில் நாம் எண்ணுகிற எண்ணம் எதுவுமே நடைபெறாது."

ஆடவர், நங்கையர் விரும்பும் நவ நாகரீகத்திற்கு ஏற்ற வெளிநாட்டு உள்நாட்டு புடைவைகளை எண்ணம் போல வண்ணம் வண்ணமாகத் தேர்ந்தெடுக்க
நெல்லை நகரில் ஏற்றதோர் புடைவைப் பூஞ்சோலை

**புதிய சீமாட்டி புடைவை மாளிகை**
பிரதான வீதி, நெல்லியடி,
கரவெட்டி.

(விளம்பர இலக்கம்: இ/5960)

"செயல் புரிவதற்கு மட்டும் உனக்கு உரிமை உண்டு...... செயலற்று இருக்க நீ ஆசைப்படாதே."
★ சிறந்த அச்சுவேலைகள்
★ புத்தகங்கள் கட்டுதல்
என்பவற்றிற்கு நாட வேண்டிய இடம்!

**அபிராம் அச்சகம்**
சாரையடி, பிரதான வீதி,
புலோலி.

"உன்னுடைய காரியங்களை நீ ஒழுங்காகச் செய்து கொண்டே இரு. ஏனென்றால் செயல் இன்மையைக் காட்டிலும் செயல் புரிவதே மேலானது"

தரமான, சுத்தமான, சுவையான பாண், பணிஸ், கேக், கல் பணிஸ் வகைகளை பெற்றிட நாடுங்கள்!

★ **ராணி பேக்கரி** ★
ஓராம்கட்டைச் சந்தி,
பருத்தித்துறை.

"விருப்பு வெறுப்பு இல்லாமல் தன் காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் மனிதன், எல்லாவற்றிலும் மிக மேலான நிலையை அடைகிறான்."

கறுப்பு, வெள்ளை, வர்ண படப்பிடிப்பு மற்றும்
கலர் மக்ரி முறைப் படப்பிடிப்புக்கும்
நீங்கள் நாட வேண்டிய ஸ்தாபனம்

**அரவிந் ஸ்ருடியோ**
ஓராம்கட்டைச் சந்தி, பிரதான வீதி,
பருத்தித்துறை.

"கடமையை நாம் விருப்பு வெறுப்பு இல்லாமல் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்"

சகல விதமான அச்சு வேலைகள், புத்தகம் கட்டுவதில் அனுபவம் மிக்க நிறுவனம்

**தமிழ்ப் பூங்கா அச்சகம்**
பிரதான வீதி.
நெல்லியடி, கரவெட்டி.

"காரியங்களைத் திறம்படச் செய்வதே கர்மயோகம்"

★ கண்ணன் கழலடி போற்றி ★

**சதா பொன்ஸ்**
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

**BECON**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
பேராதனைப் பல்கலைக்கழக
வெளிவாரிப் பட்டப் படிப்புகள்
பொருளியல்:
S. வரதராஜன் B.A. (Hons.)
G. A. Q.
பிரிவு I சனி, ஞாயிறு 4.00 – 5.00p.m.
பிரிவு II புதன், வெள்ளி 6.30 – 7.30a.m.
B. A.
சனி, ஞாயிறு 1.00 – 2.00
சனி, ஞாயிறு 3.00 – 4.00
ஆரம்பம்: 03 - 10 - 1993 ஞாயிறு
(இ-6148)

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
A/L 94
பொருளியல்
மகேந்திரன்
மீட்டல் வினா-விடை
வகுப்பு
ஆரம்பம்:
02 - 10 - 1993
(5 மணி)
(இ-6126)

**BECON**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
சனி, ஞாயிறு வகுப்புகள் **A/L 94**
மீட்டல், வினா - விடை

| ஆசிரியர் | பாடம் | சனி, ஞாயிறு நேரம் |
|---|---|---|
| S. வரதராஜன் | பொருளியல் | 7-00 — 8-00 |
| பசில் | வர்த்தகம் | 8-00 — 9-00 |
| S. S. மனோகரன் | அளவையியல் | 9-00 — 10-00 |
| சௌந்தி | கணக்கியல் | 10-00 — 11-00 |

ஆரம்பம்: 03 - 10 - 1993 ஞாயிறு
(இ-6148)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய, நல்ல நிலையிலுள்ள லான்ஸர் C/70 ஹொண்டா மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: உமாசங்கர், நெடியகாடு, வல்வெட்டித்துறை. (27468)

## விற்பனைக்குண்டு

சரம், பீற்றூட், சதிமின்காய் விதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: பிள்ளையார், 251A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (27437)

## தமிழ் இலக்கியம்

ஆண்டு 10–11இற்குரியது. கம்பராமாயணம், நாவலர், இலங்கை வளம், கவிதை விடுத்த ஓலை கொண்ட 1–19 அலகுகள் உள்ளடக்கியது. ஆக்கம்: தமிழ்வேள். விலை 60/-. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தகசாலை. (ஜி-6163)

## காவேரி சீயாக்காய் பவுடர்

பேன், சொடுகு, அழுக்கு அறவே இல்லாமல் செய்வதுடன் கூந்தல் வளர்ச்சி, கண் குளிர்மைக்கு மிகவும் சிறந்ததானது. சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். தயாரிப்பாளர்: கந்தசாமி அன் சன்ஸ், இல. 15, ஆடியபாதம் வீதி, நல்லூர். (27452)

## மூளைப்புத் தொல்லையா?

இரவில் நீம் தூபம் புகைக்கிறோம். நிம்மதியாக நித்திரை கொள்கிறோம். எமக்கில்லை, நுளம்புத் தொல்லை. பாவியுங்கள் "நீம் தூபம்" பக்கற் ஒன்று ரூபா 3/-. 25 பக்கற் கொண்ட அட்டை ரூபா 60/- மட்டுமே. அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனையாகிறது. "மின்கலைதி" (ஜி-5976)

## புலமைப் பரிசில் பரீட்சை

1993இல் நடந்த பரீட்சை வினா விடையும் உள்ளடக்கிய கடந்தகால வினா-விடை வந்து விட்டது. உயர்கல்வி நிலைய சேவைகள் நிலைய வெளியீடு: விலை ரூபா 85/- குறைந்தளவு பிரதிகளே உண்டு. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஜி 6188)

## திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிஸ்கோ றேடியோ அன்ட் வோச் வேர்க்ஸ், 284, கிராண்லி வீதி, (வானவில் அருகில்), யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (ஜி/6189)

## A/L பௌதிகவியல் 94/95

பல வருட அனுபவம் பெற்ற ஆசிரியரினால் பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம் ஏராளமான பயிற்சிகளோடு சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட பிரத்தியேக வகுப்புகள் R. பாலசுப்பிரமணியம், B Sc. (Cey.) Dip-in-Ed, 17/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (27439)

## அனுமதிப் பரீட்சை

ஆண்டு 5 மாணவர்க்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை 03-10-93 ஞாயிறு முற்பகல் 8–11 மணிகளில் நடைபெறும். மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், இல. 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (27454)

---

திருமறைக் கலாமன்றம்

வழங்கும்

# "மாதாந்த நிகழ்ச்சி"

கலைநிகழ்ச்சிகளுடன், எஸ்தாக்கியார் (கூத்து)
மறை நூல் நாடகங்களின்
வெளியீட்டு வைபவமும்

சிறப்பு நிகழ்ச்சியாக

## "நீதி காத்தான்"

(சிந்து நடைக் கூத்து)

இடம்பெறும்

காலம்: 30 . 09 . 1993 மாலை 6.30 மணி
இடம்: மன்ற அரங்கு, பிரதான வீதி
பிரவேசம்: இலவசம்.

- திருமறைக் கலாமன்றம்.

(ஜி-5979)

---

# 45ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

**லோகராணி கந்தையா**
(நல்லூர் M. P. C. S. கிராமியவங்கி)

செய்யும் தொழிலே தெய்வமெனக் கடமையாற்றி அமரத்துவமெய்திய லோகராணி கந்தையா அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

P. S. திருச்செல்வம்.
நல்லூர் ஒய்வூதியர் சங்கம்.

(27459)

---

# 47ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
**கந்தையா லோகராணி** பி. ஏ.
(நல்லூர், ப. நோ. கூ. சங்க பதில் பொதுமுகாமையாளரும், வங்கிச்சேவை முகாமையாளரும்)

தோற்றம்: 04 . 04 . 1944
மறைவு: 16 - 08 - 1993

கல்வி, அடக்கம், அறிவுடைமை, பண்பாடு,
இன்சொல், இளகியநல் உள்ளம்-இவற்றாலே
எமைக் கவர்ந்த எழில் லோகராணியே!
எம்மைத் திடீரென்று ஏன்பிரிந்து போனாயோ!
உன்னோடு ஒரு குடும்பத்தவராய் பணிபுரிந்தோம்
இந்நாள் உனக்காய் இறைதாள் பணிகின்றோம்.
ஆறுதல் நம் யாவருக்கும் ஆண்டவன்தான்-
ஒன்றென்றே
தேறுதல் காண்போம். ஓம் சிவம்.

அன்னாரது பிரிவால் வருந்தும்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கப் பணியாளர்கள்.

(27478)

---

# 15ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அளவெட்டியைச் சேர்ந்த
அமரர் கந்தையாச் செட்டியார்
விநாயகமூர்த்திச் செட்டியார் (R. D. O.)

தோற்றம்: 07 – 04 – 1922
மறைவு: 18 – 10 – 1978

திதி: புரட்டாதி பௌர்ணமி

என்னை வாழவைத்த ஆருயிர்த் தெய்வமே!
மண்ணுலகத்தை விட்டு விண்ணுலகம் சென்று
இன்றோடு பதினைந்து ஆண்டுகள் சென்றனவே
பூரணை உதிர்ந்த நன்னாளில் உங்கள்
மலர் வதனமும் மறைந்து விட்டதே
உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில்
என்றும் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

பிரிவால் துயருறும்:
மனைவி,
உறவினர்கள், நண்பர்கள்.

298, கே. கே. எஸ். றோட்,
வண்ணார்பண்ணை. (27444)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 04 – 11 – 1928

உதிர்வு: 23 – 09 – 1991



திருமதி
**ஆசைப்பிள்ளை பரமேஸ்வரி**

நொந்து சுமந்திருந்து
நொந்து பெற்று நீர் காத்த
பந்த மக்கள் நாம் அம்மா
பார்க்குமெல்லை நீர் கடந்த
அந்த வேதனையை
ஆற்றுபவர் யாரின்று?
சந்ததமும் ஆறா நெஞ்சம்
தமிழுறும் கண்ணீரின்
வந்தனைகள் ஏற்றருள்க
வாழ்வெமக்கு உம்மயம் தாயே!

உமது பிரிவால் துயருறும்;
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

76/2, அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (27474)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 – 06 – 1924



மறைவு: 23 – 09 – 1991

**அமரர் S. R. பொன்னம்பலம்**
(ஓய்வு பெற்ற அதிபர்)
கோவிலாக்கண்டி

திதி: 30 – 09 – 1993

ஆண்டுகள் இரண்டு கழிந்தாலும்,
உங்கள் நினைவுகள் என்றும் அழியா.

- மனைவி.

அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (27448)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

